

விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றிய பகுதியில் உள்ள அனுப்பன்குளம் கண்டியாபுரம் இலங்கை மறுவாழ்வு முகாமில் ரூ 1 கோடியே 35 லட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 24 தொகுப்பு வீடுகளை மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா முன்னிலையில் நிதி மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்து வீட்டை பயனாளிகளிடம் ஒப்படைத்தார். மேலும் சிவகாசியிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லும் சாலையிலுள்ள சாட்சியார்புரத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணியை பார்வையிட்டனர். இந்நிகழ்வின் போது சார் ஆட்சியர் பிரியா ரவிச்சந்திரன், வட்டாட்சியர் லட்சுமி மற்றும் மாநகராட்சி ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி உள்பட பல்வேறு அரசு துறை அதிகாரிகள், சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், மாநகர, ஒன்றிய திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





மதுரை மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் சுமார் 20 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகள் பயணிக்கும் வகையில் அதிநவீன 20 தாழ்தள சொகுசு பேருந்துகளை மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் பி.மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்து, பேருந்தில் பயணிக்க வந்த மாற்றுத்திறனாளியை வரவேற்றார். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மேயர் இந்திராணி பொன் வசந்த், சிங்காரவேலு, ஆ.வெங்கடேசன், எம்.எல்.ஏ., பூமிநாதன், எம்.எல்.ஏ., வாசுகி சசிக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

### வெளிப்படைத் தன்மையுடன்தான் துவரம் பருப்பும் பாமாயிலும் கொள்முதல் செய்யப்படுகிறது!

# பா.ஜ.க.வின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

சென்னை,அக்.19-

தரமான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் வெளிப்படைத் தன்மையுடன் கொள்முதல் செய்யப்படுகிறது என்று பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட ஆதாரமற்றக் குற்றச்சாட்டிற்குப் பதிலளித்து

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

அவரது அறிக்கை வருமாறு:

துவரம் பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதல் மற்றும் விநியோகம் பற்றி விரிவாக அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதற்கு பின் கோயம்புத்தூர் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன் வெளியிட்ட அறிக்கைக்குப் பதிலளித்து மீண்டும் ஓர் அறிக்கை வெளியிட்டேன். திருமதி. வானதி சீனிவாசன் தன் அறிக்கையில் துவரம் பருப்பின் வெளிச்சந்தை விலை ரூ. 200/- என்று குறிப்பிட்டிருந்தார். அதே கட்சியைச் சேர்ந்த செய்தித் தொடர்பாளர் அவர் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததைக் கூட அறியாமல் எவ்வித ஆதாரமுமின்றி ஒரு குற்றச்சாட்டைத் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வெளிச்சந்தையில் பருப்பு விலை என்ன என்பதைக் கூட அறியாமல் அல்லது அறிந்தும் உள்நோக்கத்துடன் வாய் புளித்ததோ

மாங்காய் புளித்ததோ என்று ஆதாரமற்ற குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார். ஒரு கடையில் (02CB047NC - அன்பழகன் நகர் - 2) பருப்பு இல்லை என்று இன்னொரு குற்றச்சாட்டையும் ஆதாரமில்லாமல் தெரிவித்துள்ளார்.

அவர் குறிப்பிட்ட கடையில் 1319 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தக் கடைக்கு அக்டோபர் 24 மாதத்திற்கு ஏற்கனவே இருப்பில் இருந்த 53 கிலோவுடன் 1119 கிலோ துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு

800 கிலோ துவரம் பருப்பு நகர்வு செய்யப்பட்டு இது வரை 605 கிலோ துவரம் பருப்பு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அது போக 248 கிலோ துவரம் பருப்பு இந்தக் கடையில் இன்று இருப்புள்ளது.

17.10.2024 அன்று கூட 39 குடும்ப அட்டைதாரர்கள் துவரம் பருப்பைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எவ்வாறு கொள்முதல் செய்யப்படுகிறது என்பதை அறியாதவர்களுக்கும் பா.ஜ.க செய்தித் தொடர்பாளருக்கும் அதன் விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் ஒளிவு மறைவற்ற திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன் படி ஒரு ஆங்கில நாளிதழிலும், தமிழ் நாளிதழிலும் பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதலுக்கு விலைப்புள்ளிகள் கோரி விளம்பரம் செய்யப்படும். அதோடு இணைய வழியிலும் (e-tender) விளம்பரம் செய்யப்படுகிறது. இந்தியா முழுதும் செய்யப்படும் விளம்பரங்களைப் பார்த்துச் சமர்பிக்கப்படும் விலைப்புள்ளிகள் மற்றும் மாதிரிப் பொருள்களை (Sample) ஒப்பந்தக் கூராய்வுக் குழு (Tender Scrutiny Committee) ஆய்வு செய்யப்பட்டு, தரம் மற்றும் தகுதிகள் உள்ள நிறுவனங்களின் விலைப்புள்ளிகளைக் குழுமத் துணைக் குழு (Board Sub Committee) ஆய்வு செய்து குறைந்த



விலைப்புள்ளிகள் அளித்த நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி இறுதிப் பட்டியலை முடிவு செய்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும்.

துணைக் குழுவில் உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குனர் மற்றும் துணைச் செயலாளர் (பட்ஜெட்) ஆகிய மூன்று இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் இடம் பெற்றுள்ளார்கள்.

துணைக்குழு ஒப்பந்ததாரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி விலைக்குறைப்பு செய்து முடிவு எடுத்ததைப் பதினொன்று இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்ட தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாகக் குழு பரிசீலனை செய்து இறுதி முடிவு எடுத்துக் குறைந்த விலைப்புள்ளிகள் அளித்த நிறுவனங்களுக்குக் கொள்முதல் ஆணைகள் வழங்கப்படுகின்றன.

மெஸர்ஸ் சி.ப்பி ஃபுட்ஸ், விருதுநகர் என்ற நிறுவனம் கனடா மஞ்சள் பருப்பினைக் கொள்முதல் செய்யக் கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். டபிள்யு. ப்பி.2377/2023 யின் தீர்ப்புரையில் பருப்பு கொள்முதல் செய்யும்போது எந்த பருப்பு விலை குறைவாக உள்ளதோ அந்த பருப்பினைக் கொள்முதல் செய்வதில் முன்னுரிமை வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த மாதத்தில் (செப்டம்பர் - 2024), அனைத்துப் பருப்புகளிலும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த ஐந்து நிறுவனங்களுக்குக் கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது. பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்ட அக்ரிகோ என்ற நிறுவனம் பேச்சு வார்த்தையிலேயே கலந்து கொள்ளவில்லை.

ஆதலால், முறைப்படி வெளிப்படைத் தன்மையுடன் முடிவெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் துறை அமைச்சரைப் பற்றியோ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குனரைப் பற்றியோ குறை கூறுவதில் அர்த்தமில்லை. ஒப்பந்தப்படி உரிய காலத்தில் விநியோகம் செய்யாத நிறுவனங்கள் மீது ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளின்படி தாக்கீது அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படியிருக்க ஒரு பொறுப்புள்ள கட்சியின் செய்தித் தொடர்பாளர் எவ்வித ஆதாரமும் இல்லாமல் 100 கோடி ரூபாய் இழப்பு மற்றும் ஊழல் என்று கூறுவது

முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானது. அதே போல் குறிப்பிட்ட ஒரு கடையில் பருப்பு இல்லை என்று கூறியிருப்பதும் அவரது அறியாமையைக் காட்டுகிறது. ஆதலால் பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் தன்னுடைய ஆதாரமற்ற குற்றச்சாட்டைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, அக் 19-

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

வருகிற 19ஆம் தேதி சனிக்கிழமை சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் மாலை 4 மணி அளவில் அபூர்வ மகாலில் நடைபெற உள்ளது .இந்த கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலை வர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமைவகிக்கிறார்.2026ல். நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள



பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் பல்வேறு பொருட்கள் குறித்து நடைபெற உள்ளது . 1.திருப்பத்தூர் தொகுதி. முன்னாள் அமைச்சர் டாக்டர் சுந்தர் ராஜன் மாநில தேர்தல் பணிக்குழு துணைச்செயலாளர். 2.காரைக்கு டிசட்டமன்ற தொகுதி முருகவேல் முன்னாள் எம்.எல்.ஏ. மாநில விவசாய அணி துணைச் செயலாளர் 3.சிவகங்கை சட்டமன்றத் தொகுதி சண்முகம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர். புதுக்கோட்டை. 4.மானாமதுரை சட்டமன்ற தொகுதி கே. ஆர் என். போஸ். மாநில விவசாய அணி துணைச் செயலாளர். ஆகியோரின் அறிமுக கூட்டமும் கீழ்கண்ட பொருள்கள் குறித்து விவாதம் நடைபெற உள்ளது. எனவே இந்த கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய ,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குசாவடி முகவர்கள்,BLA2 ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பொருள். 1.மாவட்ட அளவில் நான்கு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கள் அறிமுகம். 2.வாக்காளர் பட்டியல் நீக்கல் மட்டும் சரிபார்த்தல் . 3.கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் . பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஆண்டறிக்கை தேதிப்படியே போட்டித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன!

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவிப்பு!

சென்னை, அக். 19 -

திருத்தப்பட்ட ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட தேதிகளின்படியே போட்டித் தேர்வுகளுக்கான அறிவிக்கை வெளியிடப்பட்டதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி. எஸ்.சி.) தெரிவித்துள்ளது.

தமிழக அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப எழுத்துத் தேர்வுகளை அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தி வருகிறது. இந்தத் தேர்வுகளுக்கான அறிக்கைகள் எப்போது வெளியிடப்படும் என்ற உத்தேச திட்ட அறிக்கையை ஆண்டு தோறும் தேர்வாணையம் வெளியிடும்.

அந்த வகையில், நிகழ் ஆண்டுக்கான திருத்தப்பட்ட அறிக்கைப்படி தேர்வு அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன. அந்த ஆண்டறிக்கையில் உள்ள தேதிகளும், தேர்வு அறிவிக்கையில் உள்ள தேதிகளும் ஒன்று போல் இருந்ததாகவும் தேர்வுகளுக்கான தேதிகள் எதுவும் மாறவில்லை என்றும் அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, குரூப் 4, குரூப் 1, குரூப் 1 பி, சி, ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள், குரூப் 5 ஏ ஆகியவற்றுக்கான தேர்வுகள், ஆண்டறிக்கைப்படியே நடத்தப்பட்டுள்ளன.

மேலும் குரூப் 2 மற்றும் 2ஏ தேர்வுக்கான அறிவிக்கை ஜூன் 28-ஆம் தேதி வெளியிடப்படும் என ஆண்டு திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதற்கு முன்பாக ஜூன் 20ஆம் தேதியே தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்டது என்று தெரிவித்துள்ளது.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் பேச்சுப்போட்டி!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. - கோபி பரிசுகள் - சான்றிதழ்களை வழங்கினர்!

கிருஷ்ணகிரி, அக். 19 -

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் மத்தூரில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கவிதைகள் திரைப் பட மற்றும் நாடக வசனங்கள் ஒப்புவித்தல் போட்டிகளை கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மற்றும் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர் பர்கூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் சி.கோபி தொடங்கி வைத்து பரிசுகளை வழங்கினார்கள்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் அமைப்பாளர் எஸ்.எஸ் சங்கர் தலைமை தாங்கினார்.

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் தணிகை ஜி.கருணாநிதி வரவேற்புரை ஆற்றினார் இந்நிகழ்ச்சியில், மாவட்ட பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செந்தில், மத்தூர் ஒன்றிய கழக செயலாளர் குண.வசந்தரசு, பொதுக்குழு உறுப்பினர் கோதண்டன், அணியின் துணை அமைப்பாளர்கள் மோதிலால், ஆனந்தன், கிரிதர், கார்த்திகேயன், மோகன், முரசொலி.பார்த்திபன், சுந்தரராசன், சிவகுமார், அரவிந்தன், தேவராஜ், ஜவகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. மாநில கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் துணைச் செயலாளரும் மண்டலப் பொறுப்பாளருமான கே.வி.குப்பம் சி. கோபி ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார்கள். இந்த போட்டியில் 500க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது கவிதைகள், திரைப்படம் மற்றும் நாடகங்களின் வசனங்களை ஒப்புவித்தனர். இந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ், நினைவு பரிசு, ரொக்க பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவு பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன இந்நிகழ்ச்சியில்

சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, அன்பரசன், மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசுமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய கழக செயலாளர் ரஜினி செல்வம், மத்தூர் ஒன்றிய குழு தலைவர் லட்சுமி பெருமாள் , பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன் அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன், ஜெயேந்திரன், லட்சுமி பிரியா, புஷ்பா , இளைய ராஜா , பாலாஜி , மோகன், காந்தி, ஜீவானந்தம், ஜெயக்குமார் , சத்தியநாராயண மூர்த்தி , மற்றும் அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் சத்தியமூர்த்தி , லயோலா ராஜசேகர், மகேந்திரன், எஸ்.எஸ்.சங்கர், சுரேந்தர், சின்னத்தாய், மணிமொழி, சந்தோஷ் குமார் , மதன் ராஜ் , ராமமூர்த்தி கமல் நாதன், சுரேஷ்குமார், ஊராட்சி மன்ற தலைவர் கதிர்வேல் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை செயலாளர் ரங்கன் நன்றி உரையாற்றினார் .

இந்த நிகழ்வை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி சிறப்பான ஏற்பாடு செய்திருந்தது.

### ஜெயன் - முத்துக்குமார் பங்கேற்பு!

# தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தேனி,அக்.19-

தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தேனி தெற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் இன்று (19.10.2024- சனிக்கிழமை,) காலை 10.00 மணிக்கு மாவட்டக்கழக அவைத்தலைவர் த.மனோகரன் தலைமையிலும், கம்பம் தொகுதி பார்வையாளர் ஜெயன், ஆண்டிபட்டி தொகுதி பார்வையாளர் முத்துக்குமார் ஆகியோர்



முன்னிலையில் சின்னமனூர் நகரம், ஓடைப்பட்டி ரோடு, கவிப்பிரியா மஹாலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் இளைஞரணி சார்பில் சமூகவலைதள பயிற்சி முகாம் நடத்துவது குறித்தும், நவம்பர் மாதம் நடைபெற உள்ள வாக்காளர் சேர்த்தல், நீக்கல் முகாம் குறித்தும், மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கை குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

எனவே, இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி கிழக்கு ஒன்றியம் விரிஞ்சிபுரம் ஊராட்சி கிராமத்தில் உள்ள ஏரியில் பனைவிதை நடவு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி தொடங்கி வைத்தார். இதில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ ,மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு கிழக்கு ஒன்றிய செயலாளர் கோ.குமார பாண்டியன், ஒன்றிய பெருந்தலைவர் பாஸ்கரன், மாவட்ட கவுன்சிலர் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் மத்தூரில் கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கவிதைகள் திரைப்பட மற்றும் நாடக வசனங்கள் ஒப்புவித்தல் போட்டிகளுக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் அமைப்பாளர் எஸ்.எஸ் சங்கர் தலைமை தாங்கினார். மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் தணிகை ஜி.கருணாநிதி வரவேற்புரை ஆற்றினார் கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மற்றும் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர் பர்கூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் சி.கோபி தொடங்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் பரிசுகளை வழங்கினார்.